10/=
பக்கங்கள் 08
Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 266 புதன்கிழமை 14 பெப்ரவரி 2018 ethirolimedia@gmail.c... 021 224 38 18 / 021 300 48 48

## சவாலுக்கு ரெடி தனித்தே ஆட்சி

### சு.க.வினருக்கு ஐ.தே.க. பதிலடி

கொழும்பு, பெப்.14
ரணில் விக்கிரமசிங்கவை நீக்காவிடின், அரசாங்கத்துக்கான ஆதரவை விலக்கிக் கொள்ளப் போவதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி விடுத்துள்ள சவாலை எதிர்கொள்ள ஐக்கிய தேசியக் கட்சி தயாராக இருப்பதாக அந்தக் கட்சியின் 06▶

### மைத்திரி – ரணில் நேற்றும்

## மந்திராலோசனை

### அரசின் எதிர்காலம் விசேட குழுவிடம்



கொழும்பு, பெப்.14
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு இடையில் அவசர சந்திப்பு ஒன்று நேற்று நள்ளிரவு வரை இடம்பெற்றதால், கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பு ஏற்பட்டிருந்தது. ஆயினும் இந்தப் பேச்சுவார்த்தையும் , இணக்கமான முடிவுக்கு வராத போதும், அரசாங்கத்தின் எதிர்காலத்தைத் தீர்மானிக்க விசேட குழு ஒன்றை அமைக்க ஜனாதிபதி மைத்திரியும், பிரதமர் ரணிலும் கூட்டாக முடிவெடுத்துள்ளனர்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில், ஆளும் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி ஆகியன தோல்வியை சந்தித்திருந்தன.

இந்த நிலையில், ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் மீது அரசியல் ரீதியான கடும் அழுத்தங்கள் 06▶

### ஐ.தே.க தலைமையில் புதிய அரசு

## "அழைத்தால் போவோம்!"

### மாவை அறிவிப்பு



கொழும்பு, பெப்.14,
"ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி அமைக்க அழைத்தால் சிறந்த தீர்மானத்தை எடுப்போம்" என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும், இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து 06▶

## தமிழரசுக்கு நிழலமைச்சு

### சிவசக்தி ஆனந்தன் தகவல்



வவுனியா, பெப்.14
"மத்தியில், புதிதாக அமையவுள்ள அரசாங்கத்தில் நேரடியாக அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொள்ளாத போதிலும், நிழலமைச்சாக செயற்படுவதற்கான முயற்சிகளை தமிழரசுக் கட்சி மேற்கொள்வதாக தகவல்கள் கசிந்துள்ளன" என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளரும் 06▶

## ஈழம் சுருங்கிவிட்டது

### மகிந்த கொக்கரிப்பு



கொழும்பு, பெப்.14
"தமிழர்களின் தனித் தாயகம் என்று உரிமை கொண்டாடிய, ஈழப் பிராந்தியம் சுருங்கி விட்டது என்பதையே உள்ளூராட்சித் 06▶



## முள்ளிவாய்க்காலில் வெடித்தது குண்டு

முல்லைத்தீவு, பெப்.14
முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் கிழக்கு பிரதேசத்தில் நேற்றுக் காலை ஆர்.பி.ஜி குண்டு ஒன்று வெடித்துள்ளது.

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் கிழக்கு பகுதியில் பிரான்சிஸ் காந்தி என்பவரது வீட்டுக்கு அருகிலுள்ள காணியில் குப்பைகளுக்கு 06▶

## ஆதரவளிக்க ஈ.பி.டி.பி. தயார்



யாழ்ப்பாணம், பெப்.14,
"சில சபைகளைத் தவிர்த்து ஏனைய சபைகளில் தொங்கு நிலைமை காணப்படுவதால் எந்த கட்சி மக்கள் நலன் சார்ந்த திட்டங்களை 06▶

## "பிடிவாதம் வேண்டாம் பிணைப்பே தேவை"

### கெஞ்சுகிறார் அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம்



யாழ்ப்பாணம், பெப்.14
"தமிழ் தேசியக் கட்சிகள் இணைவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன. அதனைப் பரிசீலனை செய்ய வேண்டும். அத்துடன் பிடிவாதங்களையும் தவிர்க்க வேண்டும்" என வடமாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் பெரும்பான்மைக் கட்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தான் இருக்கின்றது. ஆனால் ஆட்சி அமைக்க முடியாத நிலை காணப்படுகின்றது. ஒரு கட்சி ஆட்சி அமைக்க வேண்டுமென்றால் இன்னுமொரு கட்சியுடன் இணைந்தே செயற்பட வேண்டும்.தற்போதைய உள்ளூராட்சித் தேர்தல் முறைமையானது பிழையானது. யாழ். 06▶

## "பிரிந்ததாலேயே சரிந்தோம்!"

### செல்வம் எம்.பிக்கு வந்த ஞானோதயம்



யாழ்ப்பாணம், பெப்.14
"உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கட்சிகள் பிரிந்து நின்றதாலேயே, தென்னிலங்கை சிங்களக் கட்சிகள் வடக்கு, கிழக்கில் காலூன்ற முடிந்தது. இனியும் நாங்கள் ஒன்றுபடாவிட்டால் எதிர்காலத்தில் மக்கள் எங்களைத் தண்டிப்பார்கள்"என்று கூறியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோ அமைப்பின் தலைவரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளருமான செல்வம் அடைக்கலநாதன். 06▶

## காணாமல் ஆக்கப்பட்டோருக்காக கண்ணீருடன் ஒரு வருடம்

வவுனியா, பெப்.14,
காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் போராட்டம் ஒரு வருடத்தை எட்டியுள்ளது.

வவுனியாவில் 365ஆவது நாளாகவும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டத்தினை மேற்கொண்டு வருகின்றனர்.

சர்வதேசத்தின் வருகையே எமது உறவுகளின் வருகையை உறுதிப்படுத்தும் என்பதை வலியுறுத்தி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் வவுனியாவில் கடந்த வருடம் சிவராத்திரி தினத்தன்று சுழற்சி முறையிலான போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர். சிவராத்திரி தினமான நேற்றுடன் குறித்த போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடத்தை எட்டியுள்ளது. அதனை நினைவுகூர்ந்து நேற்று காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் கவனயீர்ப்புப் போராட்டத்தினை மேற்கொண்டனர்.

தமக்கு எந்த விதமான தீர்வும் 06▶


## கையோடு சேருமா மொட்டு?



கொழும்பு, பெப்.14,
உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அமோக வெற்றியீட்டிய முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையிலான பொதுஜன பெரமுனவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து செயற்படவுள்ளதாகவும், இதற்கான பேச்சுக்கள் நேற்று இரவு இடம்பெற்றதாகவும் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. முதற் கட்டப் பேச்சுக்கள் கடந்த ஞாயிறு இரவே நடைபெற்று முடிந்துள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி தனித்து ஆட்சியமைக்க நகர்வுகளை ஆரம்பித்துள்ள நிலையிலும், கட்சித் தலைமையை மகிந்தவுக்கு வழங்க வேண்டும்என சுதந்திரக் கட்சியின் 06▶

உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்



### உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வெற்றி பெற்றமை குறித்து சிங்கள தொலைக்காட்சி ஒன்றுக்கு பசில் ராஜபக்ச வழங்கிய பேட்டி

தமிழாக்கம்-எஸ்.சுரேஷ்

# மகிந்தவே பிரதமர்: அதுவே மக்கள் ஆணை!

*கேள்வி: உங்கள் கட்சிக்கு கிடைத்த இந்த வெற்றி பற்றி என்ன நினைக்கிறீர்கள்?*

பதில்: பெரும் பொறுப்பை மக்கள் எம்மீது சுமத்தியுள்ளனர். இது பெரும் சவால். மக்கள் எதிர்பார்ப்பது என்னவென்று அறிந்து செயற்பட வேண்டியுள்ளது. ஆட்சி மாற்றம் ஏற்பட்டு மூன்று வருடங்களில் இந்த அரசு எதுவும் செய்யாததால் விரக்தியடைந்த மக்கள் எம்மீது நம்பிக்கை வைத்து எம்மை வெற்றிபெறச் செய்துள்ளனர். அந்த ஆணைக்கு ஏற்ப செயற்பட வேண்டியது எமது பொறுப்பாகும்.

*கே: புதிய தேர்தல் சட்டத்தின்படி உறுப்பினர்களை பகிர்ந்தளிப்பதில் குளறுபடிகள் இருப்பதால் உங்கள் பொதுஜன முன்னணி சரியாக எத்தனை ஆசனங்களை வெற்றிகொண்டுள்ளது என்பது பற்றி சரியாகத் தெரியவில்லை. உங்களுக்காவது தெரியுமா ?*

ப: உண்மையில் நாம் வெற்றிபெற்றிருப்பது 244 சபைகளிலாகும். எமது வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்ட இடங்களில் நாம் சுயேச்சைக் குழுக்களுக்கு ஆதரவு வழங்கினோம். அந்தக் குழுக்கள் வெற்றிபெற்றுள்ளன. அவற்றையும் சேர்த்தே 244 சபைகள் எம் வசம் வந்துள்ளன. இன்னும் பல சபைகளில் நாங்கள் வேறு கட்சிகளுடன் இணைந்து ஆட்சி அமைக்கும்போது எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும்.

*கே: இந்த வெற்றிக்குக் காரணம் மகிந்தவா அல்லது வேட்பாளர்களா?*

ப: இந்த மூன்று வருட ஆட்சியில் மேற்கொண்ட மக்கள்விரோதச் செயற்பாட்டை நிராகரிக்கும் வகையில் நாம் கட்சிகள், சிவில் அமைப்புகள் அனைத்தையும் ஒன்றிணைத்துக்கொண்டு பெரும் பிரசார வேலைத்திட்டத்தை முன்னெடுத்தோம். இதில் மகிந்தவினதும் வேட்பாளர்களினதும் பங்களிப்பு உண்டு. எல்லாம் ஒன்றுசேர்ந்தே வெற்றியைக் கொண்டு வந்தது.

*கே: எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு இப்படியொரு வெற்றியைப் பெற்றுள்ளீர்கள். இதற்கு அடிப்படைக் காரணம் என்ன?*

ப: இந்த அரசின் பொருளாதார, அரசியல் மற்றும் கலாசாரம் உள்ளிட்ட கொள்கைகள் அனைத்தையும் மக்கள் முற்றாக நிராகரித்தமை முதல் காரணமாகும். மூன்று வருடங்களுக்கு முன் இந்த ஆட்சியாளர்கள் கூறியவை அனைத்தும் பொய்யென்பதை மக்கள் உணந்துகொண்டமை இரண்டாவது காரணமாகும். அவர்கள் அன்று கூறியதையும் இன்று செய்ததையும் மக்கள் ஒப்பிட்டுப் பார்த்தனர். ஒன்றுக்கொன்று முரண்பட்டது. மகிந்தவை அவர்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தபோது மகிந்தவே சிறந்த தலைவர் என்று மக்களுக்குப் பட்டது. இவைதான் பிரதான காரணங்கள்.

*கே: இந்தத் தேர்தலின் வாக்கு இயந்திரம் நீங்களா? நீங்கள் வகுத்த திட்டத்தின் அடிப்படையிலா வெற்றி கிட்டியது?*

ப: உண்மையில் மக்கள்தான் இந்த வெற்றிக்குக் காரணம்.

*கே: ஜனாதிபதித் தேர்தலில் ஏற்பட்ட தோல்விக்கு நீங்கள் பொறுப்பேற்றீர்கள். அதேபோல் இந்தத் தேர்தலின் வெற்றிக்கான பொறுப்பையும் பாரமெடுப்பீர்களா?*

ப: இல்லை. அப்படிப் பாரமெடுத்தால் அது பிழை. இந்த வெற்றிக்காக பலர் உழைத்தனர். பல கட்சிகள், அமைப்புகள் உள்ளிட்ட பலரும் இதன் வெற்றிக்கு உழைத்தனர். 2015 ஜனவரி 8 ஆம் திகதியில் இருந்து அவர்கள் கடும் பாடுபட்டனர்.அவர்கள் அனைவரும் ஒன்றிணைந்தே இந்த வெற்றியைக் கொண்டு வந்தனர்.

*கே: நீங்கள் வெற்றி பெற்றபோதிலும் ஜனாதிபதித் தேர்தலில் அரசுக்கு மக்கள் வழங்கிய ஆணை அப்படியே உள்ளது என்றும் அப்போதிருந்த 52 வீத வாக்கு 54 ஆக அதிகரித்துள்ளது என்றும் அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறியுள்ளாரே?*

ப: இது வெறும் தர்க்கம் மாத்திரமே. நாம் வெற்றிபெற்ற மாவட்டங்களை எடுத்துதுப் பார்த்தால் உண்மை புரியும். ஜனாதிபதித் தேர்தலில் நாம் தோல்வியடைந்த மாவட்டங்கள் அனைத்தையும் இலக்கு வைத்து நாம் வெற்றிபெற்றுள்ளோம். எமக்கு பௌத்த மக்களின் வாக்குகள் மாத்திரம் கிடைக்கவில்லை. அனைத்து இன மக்களின் வாக்குகளும் கிடைத்தன. புத்தளத்தில் நாம் வெற்றிபெற்றோம். அங்கு அனைத்து இன மக்களின் வாக்குகளும் எமக்கு கிடைத்தன.

*கே: ஆனால்,தேசிய ரீதியான தேர்தல் ஒன்றுக்குச் செல்லும்போது இந்த நிலைமை மாறும் என்று சொல்கிறார்களே?*

ப: அந்தத் தேர்தலுக்கு ஏற்ப நாம் அப்போது வியூகம் வகுப்போம்.

*கே : பொதுஜன முன்னணியில் பதவிகள் எதையும் பெற்றுக்கொள்ளும் திட்டம் எதுவும் இல்லையா?*

ப: கட்சி அப்படியொரு தீர்மானத்தை மேற்கொண்டால் பதவிகளைப் பெற வேண்டி வரும். ஆனால், இப்படியே தொடர்ந்து இருப்பதற்குத்தான் நான் விரும்புகிறேன்.

*கே: ஜனாதிபதித் தேர்தலின் தோல்வி உங்களின் தலையில் வீழ்ந்ததாலா நீங்கள் பதவிகளைப் பெறுவதற்கு தயங்குகிறீர்கள்?*

ப: இல்லை. அதன் பொறுப்பை யாரும் என்மீது சுமத்தவில்லை. நானே பாரமேற்றுக்கொண்டேன். நான் சில பொறுப்புகளை பாரமேற்பதற்கு முன் ஆதரவாளர்களுக்கு என்மீது நம்பிக்கை வரவேண்டும் என்பதற்காகவே நான் அந்தத் தோல்விக்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டேன்.

*கே: உள்ளூராட்சி சபைகளில் உங்கள் கட்சி சுதந்திரக் கட்சியுடன் இணைந்து ஆட்சி அமைக்குமா?*

ப: சுதந்திரக் கட்சி ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து பண்டாரநாயக்கவின் கொள்கைகளை குழி தோண்டிப் புதைத்ததால் மாற்றுக் கட்சி ஒன்று நாட்டுக்குத் தேவைப்பட்டது. அந்தக் குறையை நிவர்த்தி செய்வதற்காகவே நாம் வேறு ஒரு கட்சியை உருவாக்கினோம். எமது கட்சியில் குறைபாடு இருந்தால் மாற்றுக் கட்சி ஒன்று உருவாக வேண்டியது அவசியமாகும். இதனால் சுதந்திரக் கட்சியுடனான இணைவு என்பது சாத்தியமற்றதாகும்.ஆனால், சுதந்திரக் கட்சியின் கொள்கையை உண்மையாக நேசிக்கின்றவர்கள் கிராம மட்டத்தில் உள்ளனர். அவ்வாறானவர்களுடன் இணைந்து

(05ஆம் பக்கம் பார்க்க)

எதிரொலி
Ethiroli
புதன், 14 பெப்ரவரி 2018 ethirolimedia@gmail.com

## இதுதான் இலங்கை அரசியல்!

கடந்த முப்பது வருடங்களாக போர்க்களத்தில் மாத்திரம் ஆச்சரியங்களை சமைத்துக்கொண்டிருந்த இலங்கை – ஈழ அரசியல், 2009 ஆம் ஆண்டுக்கு பின்னர் வேறு வடிவங்களில் தனது அற்புதங்களை நிகழ்த்திக்கொண்டிருக்கின்றது.

சர்வதேச சமூகம்வேறு கொஞ்சக்காலமாக சாம்பிராணி போடுவதை நிறுத்திவிட்டதால், முன்பு புகைந்து கொண்டிருந்த விடயங்கள் எல்லாம் இப்போது கொஞ்சம் என்றவுடன் வெடித்து சிதறுகின்றன.

இந்த வரிசையில், இலங்கை அரசியல் தற்போது தனது கடைகண் பார்வையை விழுத்தியிருக்கும் பெருந்தகைதான் ரணில் விக்கிரமசிங்க!

ரணில் என்பவர் யார்?

ஆகப்பழைய கதைகளுக்கெல்லாம் போகவேண்டாம். நடந்து முடிந்த கடந்த நாடாளுமன்ற தேர்தலை எடுத்துக்கொண்டால் அதில் ஐந்து லட்சம் விருப்பு வாக்குகளை பெற்று சாதனை படைத்த விலையுயர்ந்த ஒரு மேற்குலக விசுவாசி. இலங்கையில் அவரைவிட தேர்ந்த ஒரு குழப்பவாதியை கண்டுபிடித்துவிட முடியாது. அரசியலில் ஒவ்வொரு விடயத்தையும் நாசூக்காக பார்த்து பிரித்து மேய்ந்துவிடுவதில் கைதேர்ந்தவர். அவரது நரித்தனத்தை தோலுரித்து காட்டுவதற்கு தென்னிலங்கையில் யாரும் இதுவரை பிறக்கவில்லை என்றே சொல்லலாம். அந்த வகையில் பார்க்கும்போது, யாழ்ப்பாணத்துக்கு முதன் முதலாக அவர் வந்தபோது நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்குள் கூட்டிக்கொண்டு போவதற்காக அவரது சட்டையை கழற்றவைத்த மகேஸ்வரன் கெட்டிக்காரன்.

இப்படிப்பட்ட ரணில் 2015 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்த நாள் முதல், அடுத்த ஜனாதிபதியாக கதிரையேறும் கனவோடு ஒவ்வொரு நாளும் திட்டம் தீட்டிக்கொண்டிருந்தார் என்பது யாரும் கண்டுபிடிக்க முடியாத மலேசியன் எயார் லைன்ஸ் மர்மம் அல்ல.

ஆனால், முன்பு குறிப்பிட்ட இலங்கை அரசியலின் அருட்கடாட்சம் இம்முறை ரணிலின் மீது விழுந்திருக்கிறது. இதன் விளைவாக அண்ணரை கொழும்பு அரசியல், கூட்டத்தின் நடுவில் இருத்திவைத்து கும்மியெடுக்க ஆரம்பித்திருக்கிறது.

சுருக்கமாக சொன்னால், முடிசூடக் காத்திருந்தவரை இலங்கை அரசியல் வெடி வைத்துக் கிளப்பியிருக்கிறது.

உள்ளூராட்சி தேர்தல் முடிவுகள் வெளிவந்த கையோடு, ஐக்கிய தேசிய கட்சி பெற்ற தோல்விக்கு முழுப் பொறுப்பேற்று கட்சித்தலைவர் பதவியிலிருந்து விலக வேண்டும் என்று கட்சி உறுப்பினர்கள் போர்க்கொடி தூக்கியுள்ளார்கள்.

அதேவேளை, பிரதமர் பதவியிலிருந்து இராஜினாமா செய்வதன் மூலம் தேசிய அரசாங்கத்தை முடிவுக்கு கொண்டுவந்துவிட்டு, ஐக்கிய தேசிய கட்சி தலைமையிலான ஆட்சியை அமைத்து அதில் பிரதமர் பதவியை மீளப்பெற்றுக்கொள்ளும் இன்னொரு மெகா திட்டத்துடன் நேற்று மைத்திரியை சந்திப்பதற்கு போயிருக்கிறார் ரணில். அங்கு அவரோ, இராஜினாமா செய்தால் திரும்பவும் பிரதமராக ரணிலை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்று சொல்லியிருக்கிறார். சிறிலங்கா சுதந்திர கட்சியில் தற்போது ஏற்பட்டிருக்கும் குழப்பத்தை பயன்படுத்தி தன்னால் முடிந்த கடைசி ஜில்மால் விளையாட்டினை காண்பிக்கப் போக மைத்திரியின் இந்த பதிலால் பெருங்கோபத்துடன் வாக்குவாதம் செய்திருக்கிறார் ரணில். யாரை பிரதமராக நியமிப்பது என்பது எங்களது கட்சியின் வேலை, இதில் உங்களுக்கென்ன கடுப்பு என்று கூடச்சென்ற மங்களவும் குரலை உயர்த்தியிருக்கிறார். இந்த நிலைமையில், கொண்டுபோன இராஜினாமா கடிதத்தையும் மடித்து பொக்கெட்டில் வைத்துக்கொண்டு திரும்பிவந்திருக்கிறார்.

இந்த சந்தர்ப்பத்தை விட்டால் ரணிலை ஓரங்கட்ட தனக்கும் சான்ஸ் கிடைக்காது என்று தனது வரலாற்று கடமையை விசுவாத்துடன் செய்திருக்கிறார் மைத்திரி. 'ரணில் ஏற விட்ட மைத்திரி போல', என நாளையே சிங்கள தேசத்தில் ஒரு பழமொழி வந்துவிடக்கூடாது, அவரும் 'அலேர்ட்டாக' இருந்திருக்கிறார்.

தற்போது ரணிலை முற்றாகவே ஓரங்கட்டிவிட்டு, கரு ஜெயசூரியவை பிரதமராக நியமித்துவைத்துக்கொண்டு ஐ.தே.க. அரசை அமைப்பது தொடர்பாக பேச்சுக்கள் நடைபெறுகிறதாம். இந்த ஐ.தே.க. அரசில் தற்போது சுதந்திர கட்சியில் உள்ள மிச்ச சொச்ச எச்சங்கள் எல்லாவற்றையும் கூட்டி அள்ளிதங்கள் பக்கம் எடுத்து தயார் செய்துவைத்துக்கொண்டு மகிந்தவுடன் மல்லுக்கட்டுவதுதான் தற்போதைய பிளான்.

வெளியே பிரதமர் பதிவிக்கு ஆப்பு – உள்ளே கட்சி தலைமைக்கு ஆப்பு. மொத்தத்தில் ரணில் வீட்டில் மூன்று நாட்களாக அடுப்பெரியவில்லையாம்! பாரியார் பழஞ்சோற்றுக்குள்தான் தண்ணியை விட்டுக்கொடுத்துக்கொண்டிருக்கிறார் என்கிறார்கள் யானைப்பாகர்கள்.

இதுவும் இலங்கை அரசியல்தான்!

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# வாயால் வடை சுடும் நேரமல்ல

## கூட்டமைப்பின் மாற்றுத் திட்டம் குறித்து சுரேஷ் கேள்வி



யாழ்ப்பாணம், பெப்.14,

மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான கட்சி நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபை தேர்தலில் பெரும் வெற்றியை பெற்றுள்ளது. இந்தநிலையில் தமிழ் தேசிய கூட்டமைப்பு அடுத்து என்ன செய்யபோகிறது? மாற்றுத் திட்டம் என்ன? என்பதை தமிழ் தேசிய கூட்டமைப்பு வெளிப்படுத்த வேண்டும் என சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வியெழுப்பியுள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே சுரேஷ் பிரேமச்சந்திரன் இவ்வாறு கூறியுள்ளார்.

"தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக தம்மை வரித்து கொண்டிருத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பலவீனப்பட்டிருக்கிறது. இம்முறை மக்கள் மாற்றத்துக்காக வாக்களித்துள்ளார்கள். முன்னர் பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இம்முறை பலத்த பின்னடைவைச் சந்தித்துள்ளது.

வெருகல், பூநகரி போன்ற இடங்களை தவிர்த்து சகல இடங்களிலும் பெரும்பான்மையை இழந்துள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தாபன மயப்படுத்த வேண்டும் என நாம் பல சந்தர்ப்பங்களில் கேட்டிருந்த போதும் அதனைத் தமிழரசு கட்சி நிராகரித்தது. இதனால் நாம் கட்சியை விட்டு வெளியேறித் தனித்து இயங்கும் தீர்மானத்தை எடுத்தோம்.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபை தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அணி பெரும் வெற்றியை பெற்றுள்ளது. இதனால் தெற்கில் ஆட்சி மாறுமா? என்னும் அளவுக்கு நிலைமைகள் மாறியிருக்கின்றன. இந்நிலையில் இப்படியான மாற்றம் வந்தால் என்ன செய்வதென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் திட்டம் ஒன்று இருந்திருக்க வேண்டும். இல்லையெனில் தமிழ் தேசிய நிலைப்பாட்டில் இயங்கும் கட்சிகளை ஒன்றிணைக்க வேண்டும்.

அதனடிப்படையில் அடுத்தகட்ட நகர்வு என்ன? என்பது தொடர்பில் தெளிவான தீர்மானத்தை எடுக்க வேண்டும். இதற்கு தமிழரசுக் கட்சியிடம் கொள்கை மற்றும் உபாய மாற்றம் வேண்டும். இதனை விடுத்து இரா. சம்பந்தனும், சுமந்திரனும் வாயால் கருத்துக்களை கூறிக்கொண்டிருப்பதால் பயன் எதுவுமில்லை" என்றும் அவர் தெரிவித்தார். (இ)

## எல்லை நிர்ணய அறிக்கை இன்று கையளிப்பு

கொழும்பு, பெப்.14,

மாகாண சபைகளுக்கான எல்லை நிர்ணயம் தொடர்பான அறிக்கையை இன்று அரசாங்கத்திடம் கையளிக்கப் படவுள்ளதாக அதற்கென நியமிக்கப் பட்ட குழுவின் தலைவர் கே.தவலிங்கம் தெரிவித்துள்ளார்.

இன்று புதன்கிழமை காலை இந்த அறிக்கை அமைச்சர் பைசர் முஸ்தபாவிடம் கையளிக்கப்படும். மாகாணசபைகள் எல்லைகளை நிர்ணயம் செய்வதற்காக கடந்த ஒக்டோபர் மாதம் ஐவர் கொண்ட குழு நியமிக்கப்பட்டது. இது தொடர்பில் ஆராய்ந்த இக்குழு நான்கு மாத காலத்தில் தனது அறிக்கையை அரசாங்கத்திடம் கையளிக்க நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(இ)

## தேர்தலில் முன்மாதிரி



சாவகச்சேரி, பெப்.14

சாவகச்சேரி நகரசபையில், தேர்தலின் போது ஒட்டப்பட்ட சுவரொட்டிகள் தமிழ்த் தேசியப் பேரவையினரால் அகற்றப்பட்டு சுத்தம் செய்யப்பட்டன. இந்த முன்மாதிரியான நடவடிக்கை அனைவரிடமும் பாராட்டைப் பெற்று வருகின்றது. (அ)

# பிள்ளையானுடன் இணைவேன்!

## கருணா தெரிவிப்பு





மட்டக்களப்பு, பெப்.14,

"பிள்ளையானின் கட்சியோடு கூட்டுச் சேர்ந்தே மாகாணசபைத் தேர்தலை எதிர்கொள்ளப்போகிறேன்" என்று முன்னாள் பிரதி அமைச்சரும் தமிழர் ஐக்கிய முன்னணியின் தலைவருமான விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான்) தெரிவித்துள்ளார்.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் பொதுஜன பெரமுன கட்சி, அதிக உள்ளூராட்சி மன்றங்களை கைப்பற்றியதைக் கொண்டாட, நேற்று கிரானில் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் இளைஞர் அணியினரினால் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.அதன் போதே கருணா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் கட்சி, அதிகளவு உள்ளூராட்சி மன்றங்களை கைப்பற்றி மகத்தான வெற்றி பெறும் என்று கடந்த ஒரு மாதத்துக்கு முன்பே ஊடகம் ஒன்றிக்கு கருத்து தெரிவித்திருந்தேன்.

இன்று ஐரோப்பிய நாடுகளில் இவ்வாறனதொரு தேர்தல் பின்னடைவு முடிவுகள் பெற்றிருந்தால் அதிகாலையிலேயே பதவி விலகி இருப்பார்கள். 340 உள்ளூராட்சி மன்றங்களில் 232 சபைகளை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் கட்சி கைப்பற்றியுள்ளமை பாராட்டத்தக்கது.

பிரதேச மக்கள் சரியான தீர்ப்பு வழங்கியுள்ளனர். எனது கட்சியான தமிழர் ஐக்கிய முன்னணி ஆரம்பித்து ஒரு வருடத்தில் கன்னித் தேர்தலை எதிர்கொண்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் 7 ஆசனங்களைப் பெற்றுள்ளது. எதிர்காலத்தில் சிறந்ததொரு அரசியல் காய்நகர்வை மேற்கொள்ளத்திட்டமிட்டுள்ளேன். இதன் பிரகாரம் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் கட்சியின் பிரதித் தலைவர் நா. திரவியம் (ஜெயம்) என்னுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். ஏதிர்வரும் கிழக்கு மாகாண சபை தேர்தலில் எமது இரு கட்சிகளும் இணைந்து செயற்படுவதற்கு உடன்பட்டுள்ளோம். ஏனென்றால் தமிழ் தேசிய கூட்டமைப்பானது தமிழர்களின் வாக்குகளை பெற்றுக்கொண்டு சகோதர இனத்தை பலப்படுத்துவதில் அக்கறையாக உள்ளது. இவர்களுக்கு நல்லதொரு பாடம் புகட்ட வேண்டும்" என்றும் அவர் கூறினார். (இ)

## இன்று நாளும் கோளும்

14.02.2018 புதன்கிழமை ஏவிளம்பி வருடம் மாசி மாதம் 02 ஆம் நாள்

சதுர்த்தசி மு.ப. 02.53 மணி வரை | கரணம் 06.17.30 மணி வரை | சித்தயோகம்

இராகுகாலம் 12.00 - 01.30 | சுபநேரம் மு.ப. 09.10 - 10.00 | எமகண்டம் மு.ப. 07.30 - 09.00

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நன்மை | உயர்வு | நிறைவு | பாராட்டு | நலம் | இன்பம் | அசதி | பக்தி | இலாபம் | ஆக்கம் | நலம் | உற்சாகம் |

# தொழிற்சாலைக்குள் 'தீ'!



நுவரெலியா, பெப்.14

நுவரெலியா பீட்று தோட்டம் மாக்கஸ் கீழ்பிரிவில் 1973 ஆம் ஆண்டு முதல் மூடப்பட்டிருந்த தேயிலை தொழிற்சாலைக்கு இனந் தெரியாதவர்களால் தீ வைக்கப்பட்டுள்ளது இந்தத் தொழிற்சாலையின் களஞ்சியசாலைப் பகுதியில் தீ பரவியதால், அதிலிருந்த பொருட்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

நேற்று அதிகாலை 3.15 மணியளவில் இந்தத் தீவிபத்துச் சம்பவம் நிகழ்ந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

சம்பவம் இடம்பெற்ற தொழிற்சாலைக்கு அருகில் தோட்டத்தின் சிறுவர் பராமரிப்பு நிலையமும் மின்சாரம் வழங்கும் பகுதியும் காணப்படுகின்றன. ஆனால் இந்த விபத்தால் சிறுவர் பராமரிப்பு நிலையத்துக்குச் சேதமெதுவும் ஏற்படவில்லை.

சம்பவத்தை அறிந்த நுவரெலியா மாநகர சபைத் தீயணைப்பு பிரிவினர் ஸ்தலத்துக்கு விரைந்து தீயினைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்தத் தீ விபத்துக் குறித்து மேலதிக விசாரணைகளை நுவரெலியப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# கேரளக் கஞ்சாக் கடத்தல் வவுனியாவில் முறியடிப்பு

வவுனியா, பெப்.14

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு கடத்திச் செல்லப்படவிருந்த 8 கிலோ கேரளா கஞ்சாவையும், அதைக் கொண்டு சென்ற சந்தேக நபர் ஒருவரையும் வவுனியா நகரில் வைத்து பிடித்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று நண்பகல் இந்தச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வன்னி பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் வழிநடத்தலில் வவுனியா வலய பொலிஸ் அத்தியட்சகர் தென்னக்கோன், உதவி பொலிஸ் அத்தியட்சகர் பியசிறி பெர்னாண்டோவின் ஆலோசனையில்வவுனியா மாவட்ட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மகிந்த வில்லுவராச்சியின் கண்காணிப்பில் வவுனியா தலைமை பொலிஸ் நிலைய மது ஒழிப்பு பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி எஸ். ஐ. சுபசிங்க



மற்றும் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர் குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போதே குறித்த கஞ்சாப் பொதி கைப்பற்றப்பட்டது.

கஞ்சாவைக் கொண்டு சென்ற கொழும்பை வசிப்பிடமாக் கொண்ட 54 வயதுடைய சந்தேக நபரை மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# சுவாசம் மட்டுமே சுடுகலனாய்..! யாழில் சிறப்புற வெளியீடு








யாழ்ப்பாணம், பெப்.14

செஞ்சோலை சிறுவர் இல்லத்தில் மாணவியாக வளர்ந்த வன்னிமகள் எஸ்.கே.சஞ்சிகா எழுதிய 'சுவாசம் மட்டுமே சுடுகலனாய்..' கவிதை நூலின் வெளியீட்டு விழா யாழ்ப்பாணம் பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் 03.30 மணிக்கு நடைபெற்றது.

யோ.புரட்சி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், வரவேற்பு நடனத்தினை மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவி க. துர்க்கா வழங்கினார். வரவேற்புரையினை எஸ்.வி.இந்திரகலா நிகழ்த்தினார். முதன்மை உரையினை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் மொழித்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸும், வாழ்த்துரையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் மொழித்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவும் , அறிமுக உரையை சிறப்பு அதிதியான ஊடகவியலாளர் யாழ். தர்மினி பத்மநாதனும் வழங்கினர்.

நூலின் முதற்பிரதியினை நூலாசிரியரின் பிள்ளைகளான பரணிகன், சுகநிதா ஆகியோர் வெளியிட, திருமதி பற்றிக் அல்பேர்ட் திரேசாராணி மற்றும் அஸ்வின் சுதர்சன் லோஜனா ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

தொடர்ந்து கிருபா லேணர்ஸ் உரிமையாளர் கிருபாகரன், ராஜா ஹவுஸ் உரிமையாளர் சண்முகானந்தன் ஆகியோர் கௌரவப் பிரதிகளை பெற்றுக்கொண்டனர்.

நூலின் ஆய்வுரையினை அறிவிப்பாளர் பிரியமதா ஆற்றினார். பிரதம அதிதி உரையினை, நிகழ்வின் பிரதம அதிதியான படைப்பாளி வெற்றிச்செல்வி ஆற்றினார். ஏற்புரையுடன் கூடிய நன்றியுரையினை நூலாசிரியர் வன்னிமகள் எஸ்.கே.சஞ்சிகா வழங்கினார்.

இந்த நிகழ்வில் படைப்பாளிகள் உட்பட பெருமளவானோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அரசியலில் புகுந்த ஆதிவாசிப் பெண்



கொழும்பு, பெப்.14

இலங்கையின் வரலாற்றில் முதற்தடவையாக ஆதிவாசிப் பெண் ஒருவர் அரசியலுக்குள் நுழைந்துள்ளார்.

கடந்த 10ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி சார்பில் தெஹியத்தக்கண்டிய-ஹேனாநிகல தெற்கு மற்றும் வடக்கில் போட்டியிட்ட 37 வயதான டபிள்யு. எம். ஷிரோமாலா என்றப் பெண்ணே வெற்றி பெற்று உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கல்வி பொதுதராதர சாதாரண தரம் வரை கல்வி பயின்றுள்ள இவர், 1369 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளார். (அ)

# 688 பேர் கைது

கொழும்பு, பெப்.14

தேர்தல் காலத்தில் சட்டங்களை மீறிய 85 வேட்பாளர்கள் உட்பட 668 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தேர்தல் காலத்தின்போதும் அதற்குப் பின்னரும் இவர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான ருவன் குணசேகர கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார். (அ)

# கரவெட்டி தமிழ்க் கலவனில் கால்கோள் விழா







கரவெட்டி கிழக்கு தமிழ்க் கலவன் பாடசாலையில் கால்கோள் விழா, பாடசாலை அதிபர் குமாரவேலு கண்ணதாசன் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற கோட்டக்கல்வி அதிகாரி நற்குணலிங்கம் கலந்து சிறப்பித்தார். (அ–11)

# நாடகமும் அரங்கியலும் செய்முறைப் பயிற்சிகள்

யாழ்ப்பாணம், பெப்.14

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த (சா/த) பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் பாடத்துக்கு தோற்றி விரைவில் செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான இருநாள் செய்முறை பயிற்சிப் பட்டறை திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 17ஆம் 18ஆம் திகதிகளில் (சனி, ஞாயிறு) இல.286,பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

குறித்த இரு நாட்களும் காலை 08.30 மணி தொடக்கம் பி.ப 02.30 மணிவரை நடைபெறவுள்ள இந்தப் பயிற்சிப் பட்டறையில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்பாக திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் தமது பெயர்களைப் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மகிந்தவே பிரதமர்: அதுவே மக்கள் ஆணை!

**(02ஆம் பக்கத் தொடர்ச்சி)**

செயற்படுவதில் எமக்கு எதுவிதப் பிரச்சினையும் இல்லை.

ஆனால், அது கட்சிகள் இரண்டும் இணைந்து செயற்படுதல் என்று அர்த்தப்படாது. தலைவர்கள் என்ன நிலைப்பாட்டில் இருந்தாலும் கிராமங்களில் உள்ள உண்மையான சுதந்திரக் கட்சிக்காரர்களை நாம் மதிக்க வேண்டும். ஆனால், ஐக்கிய தேசிய கட்சியுடன் நாம் சேரமாட்டோம்.

*கே: தேர்தலில் ஏன் நீங்கள் சுதந்திரக் கட்சியுடன் இணைந்து போட்டியிடவில்லை?*

ப: மைத்திரி தரப்பும் மகிந்த தரப்பும் இரண்டாகப் பிரிந்து தேர்தலில் நின்றால், ஐக்கிய தேசியக் கட்சி வென்றுவிடும் என்று கூறினார்கள். எனவே ஐக்கிய தேசியக் கட்சியைத் தோற்கடிப்பதற்கான பொறுப்பை நாம் ஏற்றோம். அதன்படி செய்துகாட்டினோம். சுதந்திரக் கட்சியுடன் நாம் ஒன்றிணைந்து போட்டியிட்டிருந்தால் நாம் வென்றிருக்கமாட்டோம். சுதந்திரக் கட்சி ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்திருந்ததை மக்கள் விரும்பவில்லை. அப்படியான நிலையில் நாம் சுதந்திரக் கட்சியுடன் இணைந்திருந்தால் நிச்சயம் ஐக்கிய தேசிய கட்சியே வென்றிருக்கும். ஒன்றும் ஒன்றும் இரண்டு என்பது அரசியல் கணக்கில் இல்லை.

சுதந்திரக் கட்சியின் செயற்பாட்டால் அதிருப்தியடைந்தவர்களுக்கு மாற்றுத் தளம் ஒன்றை வழங்குவதற்காகவே நாம் புதிய கட்சியை உருவாக்கினோம். பண்டாரநாயக்க செய்ததும் இவ்வாறு தான். 1951 இல் ஐக்கிய தேசிய கட்சிக்கு மாற்றுக் கட்சியாக சுதந்திரக் கட்சியை உருவாக்கினார். 1956 இல்தான் அந்தக் கட்சி அதிகாரத்துக்கே வந்தது.

*கே: சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் எதிர்கட்சிக்கு வருவதற்குத் தீர்மானித்தால் என்ன நடக்கும்?*

ப: அது அவர்களின் தீர்மானம். ஆனால், மக்கள் எமக்குத் தெளிவான தீர்மானமொன்றைத் தந்துள்ளனர். அதன்படியே நாம் செயற்படுவோம். எதிர்காலத்தில் எமது புதிய கட்சிதான் முன்னோக்கிச் செல்லப் போகின்றது. நாட்டை ஆளப்போகின்றது.

எதிர்கால நாட்டுக்கு ஏற்றவாறு இந்தக் கட்சி உருவாக்கப்பட்டுள்ளது. பண்டாரநாயக்க உருவாக்கிய சுதந்திரக் கட்சியின் கொள்கையுடன் எமது கட்சியின் கொள்கை நெருங்குகிறது. சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் சிலர் எமது கட்சியின் கொள்கையையும் மகிந்த ராஜபக்ஸவையும் விரும்புகின்றனர்.

*கே: தேர்தலின் பின் மகிந்தவுக்கு பிரதமர் பதவி கொடுக்கப்பட வேண்டும் என்றும் உங்கள் கட்சிக்காரர்கள் கூறினார்களே. அது நடக்குமா?*

ப: அது மக்களின் நிலைப்பாடு. அந்த நிலைப்பாட்டை இந்த அரசுக்கு ஏற்காது. மே தினக் கூட்டத்தின்போது நாம் இந்த அரசுக்கு ஒரு செய்தியைக் கொடுத்தோம். அதை அவர்கள் ஏற்றுச் செயற்படவில்லை. மாறாக, அரசியல் பழிவாங்கலையே மேற்கொண்டனர். ராஜபக்ச குடும்பத்தினர் அனைவரும் சிறை செல்வர் என்று கூறியது இந்த அரசு. மக்கள் இதை விரும்பவில்லை.

*கே: தேர்தல் முடிவுகளை அடிப்படையாக வைத்து சிறைக்கு அனுப்பும் வேலை முன்னெடுக்கப்படுமா?*

ப: சிறை அனுப்புதலை மக்கள் இந்தத் தேர்தலில் நிராகரித்துவிட்டனர். உண்மையான ஊழல்வாதிகளை இந்த அரசு தண்டிக்கவில்லை சிறைக்கு அனுப்பவில்லை.அவ்வாறானவர்களை எடுத்து பதவிகளைக் கொடுத்தது. அரசியலில் அரசுக்கு சவாலாக இருப்பவர்களை மாத்திரம் தண்டிக்கின்றது.

*கே: தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் பிரதமர் பதவியில் மாற்றம் வருமா?*

ப: இது தொடர்பில் உத்தியோகப்பற்றற்ற முறையில் பல தகவல்கள் எமக்கு வருகின்றன. இந்த அரசால் முடியாது என்றொரு தீர்ப்பை மக்கள் வழங்கியுள்ளனர். அதற்கு ஏற்ப அரசு செயற்பட வேண்டும். இரு தலைவர்களையும் மக்கள் நிராகரித்துள்ளனர். ஜனாதிபதி அவரது சொந்த மாவட்டமான பொலனறுவையிலேயே தோல்வியடைந்துவிட்டார். இதைவிட என்ன இருக்கின்றது?

மக்கள் இந்த இரு தலைவர்களை மாத்திரமன்றி அரசின் கடந்த கால செயற்பாடுகளையும் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்த இருக்கின்ற வேலைத் திட்டங்களையும் நிராகரித்துள்ளனர்.

*கே: ஐக்கிய தேசிய கட்சி தனி அரசு ஒன்றை அமைத்து அதில் இணைந்துகொள்ளுமாறு உங்கள் தரப்புக்கு அழைப்புவிடுப்பட்டால்.....?*

ப: இதில் சம்பந்தப்படுவதில்லை என்று எமது முன்னணியில் உள்ள கட்சித் தலைவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து முடிவெடுத்துள்ளோம். நாம் ஒப்பந்தக்காரர்கள் ஊடாக எமது கட்சியை வளர்க்க வேண்டிய தேவை இல்லை. வடக்கு–கிழக்கு மற்றும் நுவரெலியாவில் கட்சியை வளர்ப்பதற்கு நாமே களத்தில் இறங்கி நிற்போம்.

*கே: நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கான சட்டமூலம் கொண்டு வரப்பட்டால் அதை நீங்கள் ஆதரிப்பீர்களா?*

ப: இது தொடர்பில் கூறுவதற்கு எனக்கு உரிமை இல்லை. இது தொடர்பில் நாம் எந்தவொரு முடிவையும் எடுக்கவில்லை. அவ்வாறான ஒரு நிலைமை ஏற்படும் போது எமது கட்சித் தலைவர்கள் கூடிப் பேசி உரிய முடிவை எடுப்போம்.

*கே: சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் உங்கள் அணியுடன் சேர்வதற்காக பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளனரா?*

ப: நான் அறிந்த வகையில் இல்லை.

*கே: அவர்கள் வர முடியுமா?*

ப: அவர்களை மக்கள் நிராகரித்து விட்டார்கள் அல்லவா. ஆனால், உண்மையில், மக்களால் நேசிக்கப்படுகின்ற– சுதந்திரக் கட்சியையும் மகிந்தவையும் விரும்புகின்றவர்கள் சுதந்திரக் கட்சிக்குள் உள்ளனர். அவர்களை நாம் அரவணைப்போம்.

*கே:2020 தேர்தலில் இதே போல் உங்களால் வெற்றி பெற முடியுமா?*

ப: நிச்சயமாக. நாட்டை முன்னேற்ற வேண்டுமென்றால் அது மகிந்தவால் மாத்திரமே முடியும் என்பதை நாட்டு மக்கள் உணர்ந்துள்ளனர். இந்த உணர்வு அடுத்து வரும் எல்லாத் தேர்தல்களிலும் இருக்கும். ஆகவே, எமக்கு தொடர் வெற்றி கிடைக்கும். நாட்டின் அதிகாரம் மீண்டும் எமது கைகளுக்கு வரும். ■



## அந்தரிக்கப் போறம் போலை கிடக்கு?

"எல்லாம் போச்சுது. கவிண்டு கொட்டிண்டு போச்சுது அண்ணை" எண்டு தலையிலை கைவைச்சுக் கொண்டு வந்தான் முதலி. இராத்திரி சிவராத்திரி விரதமிருந்தவன். நித்திரை முழிச்சவன் கோவில் பூசையிலை ஏதாச்சும் பிழை நடந்திட்டுதோ எண்டு "என்னடா" எண்டு கேட்டன்.

ஒரு தமிழற்றை ஏரியாவிலையும் நிம்மதியா ஆட்சி அமைக்கேலாது எண்டு சொல்லினம். வீட்டோடை சைக்கிள் ஒத்துப்போகுதில்லையாம். சங்கரியோடையும் உப்பிடித்தானாம். ஒரே இழுபறியாக் கிடக்கு எண்டு சொல்லினம்.

எண்டு முதலீன்ரை ஒப்பாரி.

ஆனால் உப்பிடி வந்தால்தான் சனத்துக்கு வேலை நடக்கும் எண்டு கச்சேரியிலை வேலை செய்யிற பரமசிவம் சொன்னவர். பெரும்பான்மையா வந்தால் காசடிக்கிற வேலைதான் நடக்குமேயொழிய வேலை நடவாதாம். தங்கடை தங்கடை விருப்பத்துக்குக் காசை அள்ளித் தெளிச்சுப் போட்டுப் போவிடுவினம். இது எதிர்க்கட்சி கேள்வி கேக்கும் எண்ட் பயத்திலை வேலையைச் செய்வினமாம். ஆனபடியால் உது தான் நல்லது எண்டு அவர் சொல்லுறார்.

இப்ப அரசியல் எண்டது மக்களுக்குச் சேவை செய்ய வேணும் எண்ட நிலைமாறி, ஒரு தேர்தல் அரசியலா வந்திட்டுது. ஆரைப்பாத்தாலும் பணத்தைச் சுருட்டிறதுக்கும், பதவி எடுக்கிறதுக்குமா அரசியலை நினைக்கினமேயொழிய அதுக்குள்ளாலை ஊரையும், சனத்தின்ரை சீவியத்தையும் மேலை கொண்டு வரலாம் எண்ட நினைவு அவைக்கு இல்லை.

கதிரையிலை வந்து இருக்கிறவரைக்கும் மாச்சல் பட்டு, மாச்சல் பட்டு ஓடித் திரிவினம். வந்து குந்தீட்டால் பிறகு கண்விண் தெரியாது. முன்னம் வலிய வந்து அண்ணை! எண்டவை, பிறகு கண்டால் ஆர் நீங்கள்? எண்டு கேப்பினம். எல்லாரும் இல்லை, சிலர் அப்பிடித் தான்.

இந்த உள்ளூராட்சித் தேர்த்தலிலை தமிழ் சனத்தையும் விடச் சிங்களச் சனம் வலு தெளிவா இருக்கிற மாதிரி எங்களுக்குத் தெரியிது எண்டு பேப்பர் கடைக்கு வாற அந்தத் தொண்டு நிறுவனத்திலை வேலை செய்யிற தம்பி சொன்னவர். சிங்களச் சனத்திலை எல்லாரும் எண்டு ஏன் பழியைச் சொல்லுவான்? பெரும்பான்மைதான் தமிழற்றை பிரச்சினையைத் தீர்க்கக்குடாது, உரிமையைக் குடுக்கப்பிடாது எண்டு வலு தெளிவா நினைக்கினம். தங்களை ஆர் பாது காப்பினமோ அவைக்கு வோட்டைக் குடுப்பம் எண்டு மகிந்தாவுக்கு அள்ளிப் போட்டிருக்கினம். இதுவரைக்கும் இருக்கிற அரசாங்கத்தாலை மகிந்தாக்கு மேலை வைச்ச குற்றச்சாட்டைப் பற்றி அவைக்குக் கவலையில்லை. ஆர் என்னத்தைச் செய்தால் என்ன தமிழாக்களுக்கு ஒண்டும் போய் சேரக்குடாது எண்டதுதான் அவையின்ரை கொள்கை போல கிடக்கு.

ஏன் இஞ்சையும் என்ன நடந்திருக்கு. தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு மேலை எத்தினை குற்றச்சாட்டு?. சுமந்திரனிலை எத்தினை குற்றச்சாட்டு? எங்கடை தமிழ்சனம் வலது காதாலை கேட்டு இடது காதாலை விட்டிட்டுதெல்லே? அதாலை தானே தமிழ் தேசியக் கூட்டமைப்புக் போட்டிருக்கினம். பிறகேன் சிங்களச் சனத்தைப் பற்றிச் சொல்லுவான்? தமிழனுக்குத் தன்னிலை அக்கறை இல்லை.

மிகவும் கேவலமான ஒரு அரசியல் நெருக்கடியிலை நாங்கள் இருக்கிறம் எண்டு தெரியிதெல்லே? திருப்பியும் ஒரு குரங்குப் பிடிக்கை போகப்போறமாதிரிக் கிடக்கு. மைத்திரியும், ரணிலும் தேரை இழுத்துக் கொண்டு வந்து நடுச் சந்தியிலை கையைவிட்டிட்டுப் போகப் போயினம். தேரிலை கிடக்கிற பாவை, மணி, சீலை, தொம்பை, சில்லு, சட்டம் எண்டு அக்குவேறை ஆணி வேறையாக் கழட்டுப்படப் போகிது. நாங்கள் அண்ணாந்து முடியைப் பாத்துக் கும்பிடுறதுக்குத் தேர் உச்சிலை கிடந்த வெள்ளி முடியையும், குடையையும் காணாமல் சிவ... சிவா எண்டு ஆகாயத்தைப் பாத்துக் கத்திக் குளறப்போறம் எண்டு முதலி சொல்லுறான். அந்தரிக்கப் போறம். அது தான் எங்கடை தலை எழுத்தோ தெரியேல்லை?

**- வில்லங்கம் விநாசி**

# ரணிலை அகற்றினால் ஐ.தே.கவுக்கு ஆதரவு

## அமைச்சர் தயாசிறி சொல்கிறார்

கொழும்பு, பெப்.14,

ரணில் விக்கிரமசிங்கவை நீக்காவிடின், கூட்டு அரசாங்கத்தில் இருந்து விலகப் போவதாக, சிறிலங்கா சுதந்திரக் கட்சி எச்சரித்துள்ளது.

சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர இது தொடர்பாக கருத்து வெளியிடுகையில்,

"அண்மையில் நடந்த உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்துக்குப் பின்னால் நிற்க முடியாத நிலை எமக்கு ஏற்பட்டுள்ளது. எனவே கூட்டு அரசாங்கத்தில் இருந்து விலகி, சுதந்திரமாகச் செயற்பட சிறிலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் முடிவு செய்துள்ளனர். ஐதேக அமைச்சர்களுடன் எமக்கு எந்த மனக்கசப்புகளும் கிடையாது.

ரணில் விக்கிரமசிங்க இல்லாத எந்தவொரு அரசாங்கத்துக்கும் நாம் ஆதரவளிப்போம். சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் உள்ள 41 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 35 பேர் எந்தக் காரணத்தைக் கொண்டும் மகிந்த ராஜபக்சவினுடைய சிறிலங்கா.பொதுஜன முன்னணியில் இணைந்து கொள்ளப் போவதில்லை என்று உறுதியளித்துள்ளனர்." என்று கூறினார். (இ)

# தெவரப்பெரும மருத்துவமனையில்

கொழும்பு, பெப்.14

கடந்த 5 நாட்களாக புளத்சிங்கள நகரில் உண்ணாவிரதம் இருந்து வந்த பிரதி அமைச்சர் பாலித தெவரப்பெரும நேற்று தனது உண்ணாவிரதத்தைக் கைவிட்டுள்ளார்.

இந்நிலையில் அவரது உடல்நிலை மோசமடைந்துள்ளதால் அவர் தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தேர்தல் சட்டதிட்டங்களை மீறியமை மற்றும் ஆதரவாளர் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவத்தில் புளத்சிங்கள பொலிஸ் நிலையத்தில் முறைபாடு தெரிவிக்கப்பட்டுள்ள போதும், அது தொடர்பில் பொலிஸார் சட்டத்தை அமுல்படுத்தாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த 5 நாட்களாக பிரதி அமைச்சர் பாலித தெவரப்பெரும புளத்சிங்கள நகரில் உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தமைக் குறிப்பிடத்தக்கது. (இ)

# தொடர்ச்சிகள்

### தமிழரசுக்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினருமான ந.சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

அவ்ர் நேற்றுச் செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"இடைக்கால அறிக்கைக்கான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதை நோக்கமாகக் கொண்டு இந்தத் தேர்தல் நாடு முழுவதும் நடைபெற்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையும் இதனையே தெரிவித்திருந்தது. தமிழரசுக் கட்சி தவிர்ந்த தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உள்ளிட்ட தமிழ்க் கட்சிகள் இடைக்கால அறிக்கையை ஏற்க மறுத்திருந்தன. இதனடிப்படையிலேயே மக்களின் தீர்ப்பும் அமைந்துள்ளது.

நடைபெற்ற தேர்தல் ஒட்டுமொத்த இலங்கையின் அரசியலையே புரட்டிப்போட்டுள்ளது. ஊழலை மையப்படுத்தி ஜனாதிபதி சுழற்றிய வாள், ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஆகிய இரண்டையும் பதம் பார்த்துள்ளதுடன் புதிதாக உதயமான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன என்னும் முன்னாள் ஜனாதிபதி தலைமையிலான கூட்டணிக்கு அமோக வெற்றியைத் தந்துள்ளது.

மறுபுறத்தில் வடக்கு-கிழக்கு தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் பரப்பில் பொதுவான கொள்கையின் கீழ் ஜனநாயக பன்மைத் தன்மையை ஏற்று பொதுவான வேலைத் திட்டத்தின் அடிப்படையில் உளப்பூர்வமானதும், சட்ட அங்கீகாரம் மிக்கதுமான ஐக்கிய முன்னணி ஒன்று உருவாக்கப்படவேண்டிய அவசியத்தை உணர்த்தியுள்ளது. எமது மக்கள் தமிழரசுக் கட்சியின் ஏகபோக எதேச்சதிகாரப் போக்கை வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

தற்போது தென்னிலங்கையில் நிலவும் குழப்பகரமான சூழலில் அமைச்சரவையில் பெரும் மாற்றங்கள் நிகழவுள்ளன. இந்நிலையில் தமிழரசுக் கட்சி சில முக்கியமான பதவிகளைப் பெற்றுக்கொள்ளப்போவதாகவும் வதந்திகள் உலவுகின்றன. இதற்காக மீண்டும் ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் அரசாங்கத்தை பிணையெடுக்கும் நடவடிக்கையை மேற்கொள்ளப்படுகிறதா என்ற சந்தேகமும் எழுந்துள்ளது. இந்நிலையில், நேரடியாக அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொள்ளாத போதிலும் நிழலமைச்சராகப் பொறுப்பேற்பதற்கான முயற்சிகளையும் தமிழரசுக் கட்சி மேற்கொள்வதாகவும் தகவல்கள் கசிந்துள்ளது.

இந்நிலையில், அரசாங்கக் கட்சிகளுடன் இணைந்து உள்ளூராட்சி சபைகளைப் பொறுப்பேற்றால், அது அவர்களது எதிர்வரும் மாகாணசபைத் தேர்தல்களில் தமது வெற்றி வாய்ப்பை பாதித்துவிடும் என்று அஞ்சியே தமிழரசுக் கட்சி இன்று தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்புடனும், தமிழ் தேசியப் பேரவையுடனும் பேச்சுவார்த்தை நடத்த விரும்புவதாகப் பகிரங்க அழைப்புகளை விடுக்கின்றது.

கூட்டமைப்பு சட்டவலுவுள்ளதாக தேர்தல்கள் ஆணையகத்தில் பதிவு செய்யப்பட்டு அதற்கென்று ஒரு பொதுச் சின்னத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டும். ஐக்கியத்துக்கான எமது கதவுகள் திறந்தே உள்ளன" என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

### "அழைத்தால்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.தே.க.தனி அரசாங்கம் அமைப்பது தொடர்பில் கேட்கப்பட்ட போதே மாவை சேனாதிராஜா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"ஐக்கிய தேசியக் கட்சியுடனோ வேறு எந்த கட்சியுடனோ இணைந்து ஆட்சியமைக்க இதுவரை எமது கட்சிக்கு எவ்வித அழைப்பும் விடுக்கப்படவில்லை. அரசாங்கம் இது தொடர்பில் அழைப்பு விடுக்கும் பட்சத்தில் சிறந்த தீர்மானமொன்றை எடுப்போம். தனி அரசாங்கம் அமைப்பது தொடர்பில் அழைப்பு விடுக்கப்படுமாயின் , எமது கட்சியின் மத்திய செயற்குழு கூடி இது தொடர்பில் இறுதித் தீர்மானமொன்றினை மேற்கொள்ளும்" என்று அவர் தெரிவித்தார்.

இலங்கையின் அரசியல் நிலைப்பாட்டில் தற்போது நிலவி வரும் அரசியல் நிலவரங்களின் அடிப்படையில் ஐக்கிய தேசியக் கட்சி தனி அரசாங்கம் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆதரவளிக்கும் என்று கூறப்பட்டு வருகின்றது. இப்படியான சூழலில் அழைப்பு விடுத்தால் சாதகமாகப் பரிசீலிப்போ எனத் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரும் தெரிவித்துள்ளமையால், புதிய அரசில் கூட்டமைப்பு இடம் பெறும் என்ற தகவல் இன்னும் உறுதியாகியுள்ளது.

கூட்டமைப்பின் ஆதரவுடன் ஐ.தே.க. தனித்து ஆட்சி அமைக்கும் என்பதை நேற்று 'எதிரொலி' கோடி காட்டியிருந்தமை தெரிந்ததே. (இ)

### பிடிவாதம்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாநகர சபையைப் பொறுத்தவரையில் 27 வட்டாரங்களில், 14 பெரும்பான்மையான வட்டாரங்களை வென்றும் நாங்கள் இன்று ஆட்சி அமைக்க முடியாத நிலை உள்ளது.

இதுமட்டுமன்றி, வேறு சில சபைகளைப் பார்க்கின்ற போது வட்டாரங்களில் வெல்ல முடியாதவர்கள் விகிதாசார ரீதியில் ஒன்று அல்லது இரண்டு இடங்களைப் பெற்றுள்ளார்கள். இந்த முறைமையில் உள்ள பின்னடைவு, ஸ்திரத்தன்மையற்ற நிலையைத்தான் உருவாக்கியுள்ளது.

எவ்வாறு இருந்தாலும் தமிழ்தேசியக் கூட்டமைப்புக்கு இது தோல்வி நிலை அல்ல. தற்போதைய நிலையில் ஏதாவது ஒரு இணக்கப்பாட்டுக்கு வரவேண்டிய தேவை உள்ளது. இதற்கு எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை. கடும் நிபந்தனைகளை யாரும் விதிப்பது நல்லதல்ல. இணக்கப்பாட்டுடன் செல்வதே நல்லது. தமிழ்க் கட்சிகள், தமிழ் தேசியக் கட்சிகள் இணைவதுக்கு வாய்ப்புக்கள் இருக்கின்றன. அதனை பரிசீலனை செய்ய வேண்டும். பிடிவாதங்கள் தவிர்க்கப்படல் வேண்டும்.

நாங்கள் தமிழ்த் தேசியத்தில் இருந்து விலகவில்லை. சமஷ்டிக் கட்டமைப்பில் இருந்தும் விலகவில்லை. வட கிழக்கு இணைப்பிலும் மாற்றமில்லை. 1956 ஆம் ஆண்டு தனிச் சிங்கள சட்டம் கொண்டுவரப்பட்டபோது, அடுத்த அரசியலமைப்பில் தமிழ், சிங்களம் இரண்டும் தேசிய மொழியாக்கப்படும், பிரயோக மொழியாக்கப்படும் என யாரும் எதிர்பார்க்கவில்லை. மாற்றங்கள் இடம்பெற்றுத் தான் இருக்கின்றன. ஆகையால் வட கிழக்கு இணைப்பும் அவ்வாறான மாற்றங்களில் வரும். இதுதான் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொள்கையாகும்.

எமது கொள்கைகளில் உறுதியாகவே உள்ளோம். இடையில் இதனை சிலர் வியாக்கியானம் செய்யலாம். அவ்வாறு செய்வது அவர்களின் தனிப்பட்ட கருத்தாகவே இருக்கும். கட்சியின் முடிவல்ல" என்றும் அவர் கூறினார்.

கூட்டமைப்புடன் இணைவதாயின், அதன் தலைமைகள் அகற்றப்பட வேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்த கருத்துக்கே , சீ.வி.கே சிவஞானம் இவ்வாறு பதிலளித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.(அ்)

### ஈழம்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் முடிவுகள் எடுத்துக் காட்டுகின்றன" என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலில் சிறிலங்கா பொதுஜன முன்னணி பெற்றுள்ள வெற்றி தொடர்பாக, நாளிதழ் ஒன்றில் வெளியாகியிருந்த இலங்கையின் வரை படத்தை காண்பித்தே மகிந்த ராஜபக்ச இவ்வாறு கூறியிருக்கிறார்.

"ஒவ்வொரு மூலை முடுக்கிலும் சிறிலங்கா பொதுஜன முன்னணி வெற்றியைப் பெற்றிருக்கிறது.

நாடு முழுவதிலும் குரக்கன் வர்ணம் (கடும் மாநிறம்) பரவியுள்ளது. தங்களின் தனியான தேசம் என்று சொல்லப்பட்ட ஈழப் பிரதேசமும் கூடச் சுருங்கியுள்ளது. இது தான் சிறிலங்கா பொதுஜன முன்னணியின் பலம்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

### மந்திராலோசனை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்டிருந்தன. தேர்தல் முடிவுகள் வெளியான பின்னர் ஜனாதிபதியும், பிரதமரும் இரண்டு தடவைகள் சந்தித்து பேசியிருந்தனர். ஐ.தே.க தனித்து ஆட்சியமைக்கப் போவதாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில், மூன்றாவது முறையாகவும் குறித்த இருவரும் நேற்றிரவு சந்தித்து மந்திராலோசனையில் ஈடுபட்டனர்.

இதில், ஐக்கிய தேசியக் கட்சியின், மங்கள சமரவீர, கபீர் ஹாசீம், ரஞ்சன் ராமநாயக்க உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

அரசின் எதிர்காலத்தை விசேட குழுவே தீர்மானிக்கவுள்ளதால், அடுத்து வரும் நாள்களில் கொழும்பு அரசியல் இன்னும் பரபரப்பான நிலையை அடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)

### சவாலுக்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தவிசாளர் அமைச்சர் மலிக் சமரவிக்கிரம தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுச் செய்தியாளர்களிடம் பேசிய அவர், "கூட்டு அரசாங்கத்தில் இருந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி விலகிக் கொண்டால், ஐ.தே.க தனித்து ஆட்சியமைக்கும். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து எமது கட்சியின் தலைவரை நாங்கள் நீக்க மாட்டோம். அவ்வாறானதொரு நிலை வந்தால் ஐ.தே.க. தனித்து ஆட்சியமைக்கும்" என்று தெரிவித்தார். (இ)

### பிரிந்ததாலேயே... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். நகரில் நேற்று மாலை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"சமஷ்டி முறையிலான அரசியலமைப்பு, ஈழத்தைப் பெற்றுக் கொடுக்கப் போகிறது என தென்னிலங்கையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மேற்கொண்ட பிரசாரத்தால் தெற்கில் மக்கள் ஒன்றிணைந்து அவருக்கு வாக்களித்துள்ளனர். ஆனால் நாங்கள் பிரிந்து நின்றதால் சிங்களத் தேசியக் கட்சிகள் வடக்கு, கிழக்கிலும் கணிசமான வெற்றிகளைப் பெற்றுள்ளனர்.

இதனால் நாங்கள் சில சபைகளில் ஆட்சியமைக்க முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கட்சிகள் இனியும் ஒண்றிணைந்து செயற்படவில்லை என்றால் மக்களுடைய எண்ணங்கள் அல்லது அவர்களுடைய செயற்பாடுகள் திசை திரும்பும் என்பதையே இந்தத் தேர்தல் முடிவுகள் மிகத் தெளிவாகச் சொல்கின்றன.

இது தமிழ்த் தேசிய வழியில் பயணித்தாலும் பிரிந்து நிற்கும் சகல கட்சிகளுக்கும் மக்கள் விடுத்துள்ள எச்சரிக்கை. இதனைத் தமிழ்த் தேசியக் கட்சிகள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

எங்களுக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி நாங்கள் ஒற்றுமையாக செயற்பட வேண்டும். இவ்வாறான நிலையிலும் நாங்கள் ஒற்றுமைப்படாது பிரிந்து நின்று செயற்படுவோமாக இருந்தால் எதிர்காலத்தில் மக்களால் நாங்கள் தண்டிக்கப்படுகின்ற நிலை ஏற்படும்" என்றும் அவர் தெரிவித்தார்.(அ)

### முள்ளிவாய்க்காலில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீ வைக்கும் போதே, அதில் இருந்த குறித்த குண்டு வெடித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குண்டு வெடிப்பினால் அருகில் பல வீடுகள் இருந்த போதும் வீடுகளுக்கு சேதம் எதுவும் ஏற்படவில்லை எனவும், யாரும் காயமடையவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது .(அ)

### கையோடு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூத்த அமைச்சர்கள் கோரியுள்ள சூழலிலும் இந்தப் பேச்சுக்கள் நடைபெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. எதிர்வரும் நாள்களில் மாற்றமொன்றை எதிர்பார்க்கலாம் என சுதந்திரக் கட்சி வட்டாரங்களை மேற்கோள் காட்டித் தெரிவிக்கப்படுகிறது. அவ்வாறான நிலைமை ஏற்பட்டால் பிரதமர் பதவியை மகிந்த ஏற்பார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

### காணாமல்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரப்படாத நிலையிலும் தீர்வு கிடைக்கும் வரை தாம் போராட்டத்தைத் தொடர்ந்து மேற்கொள்ளப் போவதாக போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர். (இ)

### ஆதரவளிக்க... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுக்கின்றதோ அந்த கட்சிக்கு நாங்கள் வெளியிலிருந்து ஆதரவு அளிப்பதற்கு தயாராக உள்ளோம்" என்று ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். (அ)

# பெண்ணின் கண்ணில் ஆபத்தான புழுக்கள்



வோஷிங்டன், பெப்.14

அமெரிக்காவைச் சேர்ந்த பெண் ஒருவரின் இடது கண்ணிலிருந்து 14 சிறு புழுக்கள் வெளியே எடுக்கப்பட்டுள்ளன.

ஈக்களினால் பரவும் ஒருவிதமான அரிய கிருமித் தொற்றினால் முதல் முறையாக மனிதரில் ஒருவருக்கு இந்த வகைப் பயங்கர நோய் ஏற்பட்டுள்ளமையானது மருத்துவ விஞ்ஞான உலகில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 2016 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 26 வயது பெண் ஒருவரின் இடது கண்ணிலிருந்து 14 சிறு புழுக்கள் அகற்றபட்டுள்ளன. இந்த அதிர்ச்சிச் சம்பவத்தை மருத்துவ விஞ்ஞானிகள் இப்போதுதான் வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளனர்.

வடக்கு அமெரிக்காவிலும் தெற்கு கனடாவிலும் கால்நடை விலங்குகளில் இத்தகைய புழுக்கள் காணப்படுவது இயல்பானது. ஆனால் மனிதக் கண்ணில் இத்தகைய புழுக்கள் தோன்றுவது இதுவே உலகில் முதல் முறை.

ஃபேஸ் ஃபிளைஸ் என்ற ஒருவிதமான ஈக்கள் மூலம் இந்தக் கிருமித் தொற்று பரவுகிறது. இது கண்ணீரை உண்டு வாழும் ஜீவன். கடற்கரை கால்நடைப் பண்ணை அருகே இந்தப் பெண் குதிரைச் சவாரி, மீன்பிடித்தல் ஆகிய பொழுது போக்குகளில் ஈடுபட்டவர்.

இந்தக் கிருமி தொற்று ஏற்பட்டு ஒரு வாரத்துக்கு அவருக்குக் கண் எரிச்சல் இருந்துள்ளது, அப்போது கண்ணிலிருந்து அந்தப் பெண் ஒரு புழுவை வெளியே எடுத்தார், அடுத்த சில வாரங்களில் இவரே மேலும் சில புழுக்களை கண்ணிலிருந்து எடுத்துள்ளார். ஒளிஊடுருவும் நிறத்தில் இருக்கும் இந்தப் புழுக்கள் அரை இஞ்சி நீளமே இருந்தன.

புழுக்களை வெளியே எடுத்த பிறகு அவருக்குத் தொந்தரவு எதுவும் ஏற்படவில்லை. அதன் பின்னரே அவரது கண்ணில் இருந்தவை ஆபத்தான-அரியவகையின- புழுக்கள் என்பது தெரிய வந்துள்ளது. (அ)



# “பிறப்புறுப்பில் சுடுங்கள்” வலுக்கிறது எதிர்ப்பு

மணிலா, பெப்.14

“அரசுக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபடும் பெண் போராளிகளின் பிறப்புறுப்புகளில் சுடுங்கள்” என்று பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி ரொட்ரிகோ டியுடெர்ட் கூறியது பெரும் சர்ச்சை ஏற்படுத்தியுள்ளது.

பிலிபைன்ஸ் ஜனாதிபதி ரொட்ரிகோ டியுடெர்ட் கடந்த பெப்ரவரி 7 ஆம் திகதி பிலிப்பைன்ஸில் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றுப் பேசும்போது, “எங்கள் இராணுவ வீரர்கள் உங்களைக் கொல்லப் போவதில்லை. நாங்கள் உங்கள் பிறப்புறுப்புகளில் துப்பாக்கிக் குண்டுகளால் சுடுவோம். அதன்பிறகு நீங்கள் பயனற்றுப் போவீர்கள்” என்று கூறினார்.

டியூடெர்டின் இப்பேச்சுக்கு மனித உரிமை மற்றும் மகளிர் அமைப்புகள் பலவும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

பெண் போராளிகள் குறித்த டியூடெர்டின் இக்கருத்துக்கு பிலிப்பைன்ஸின் மனித உரிமைகள் அமைப்பின் உறுப்பினர் ஒருவர் கூறும்போது, “டியூடெர்ட் பாலியல் துன்புறுத்தல்களை ஊக்குவிக்கிறார். இது சர்வதேச மனித உரிமை சட்டத்தை மீறுவதாகும்”என்றார்.

டியுடெர்ட் பிலிப்பைன்ஸின் ஜனாதிப்தியாக கடந்த 2016 ஆம் ஆண்டு பதவி ஏற்றது முதல் இதுவரை குற்றவாளிகள் என 5,000 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர்.

டியுடெர்டின் இந்தச் செயலுக்கு பல்வேறு மனித உரிமை அமைப்புகளும், அமெரிக்கா போன்ற உலக நாடுகளும் தங்களது எதிர்ப்பைத் தெரிவித்தன. இருப்பினும் அதற்கெல்லாம் சற்றும் செவி சாய்க்காமல் குற்றவாளிகளுக்கு எதிரான மிகக் கடுமையான தண்டனைகளை டியுடெர்ட் செயற்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (அ)

# 100 நிமிட ‘நாச்சியார்’




சென்னை, பெப்.14

‘நாச்சியார்’ படத்தை 100 நிமிடங்கள் கொண்ட திரைக்கதையாகவும், ஒரே ஒரு பாடலுடனும் உருவாக்கியிருக்கிறார் இயக்குநர் பாலா.

பாலா இயக்கத்தில் உருவாகியுள்ள ‘நாச்சியார்’ திரைப்படம், பெப்ரவரி 16 ஆம் திகதி திரைக்கு வரவுள்ளது. பி ஸ்டூடியோஸ் மற்றும் ஈயான் ஸ்டூடியோஸ் இணைந்து தயாரித்திருக்கும் இந்தப்படத்தை காளிதாஸ் வெளியிடவுள்ளார்.

ஜோதிகா, ஜி.வி.பிரகாஷ் உள்ளிட்ட பலர் நடித்திருக்கும் இந்தப்படத்துக்கு இளையராஜா இசையமைத்துள்ளார்.

முதன் முறையாக 100 நிமிடங்களே ஓடக்கூடிய கதையாக ‘நாச்சியார்’ படத்தை உருவாக்கியுள்ளார் பாலா.

மேலும், இளையராஜா இசையில் ஒரே ஒரு பாடல் மட்டுமே படத்தில் இடம்பெற்றுள்ளது. எப்போதுமே 2.30 மணி நேரத்துக்கு மேலாகவும், பாடல்களிலும் கவனம் செலுத்தும் பாலா, இம்முறை முழுக்க வேகமாக செல்லும் திரைக்கதையாக அமைத்து இயக்கியுள்ளார் .

‘நாச்சியார்’ பணிகள் முழுமையாக முடிந்துவிட்டதால், தற்போது விக்ரமின் மகன் துருவ் நடிக்கவுள்ள ‘வர்மா’ படத்தின் முதற்கட்டப் பணிகளில் கவனம் செலுத்தி வருகிறார் பாலா. இப்படத்தின் வசனங்களை எழுதி வருகிறார் இயக்குநர் ராஜூமுருகன். இதன் படப்பிடிப்பு விரைவில் தொடங்கவுள்ளது. (அ)

# ஐ.எஸ் தலைவர் உயிருடன்!



வோஷிங்டன், பெப்.14

அமெரிக்க விமானப்படைத்தாக்குதலில் கொல்லப்பட்டுவிட்டதாகக் கருதப்பட்ட, ஐ.எஸ். தலைவர் பாக்தாதி உயிருடன் இருப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

சிரியாவின் ராக்கா அருகே கடந்த ஆண்டு ஐ,எஸ் தீவிரவாத அமைப்பின் முக்கியத் தலைவர்கள் பங்கேற்ற கூட்டம் நடந்தது. அப்போது சுகோய் ரக போர் விமானங்கள் மூலம் அவர்கள் குழுமியிருந்த பகுதியில் வான்வழித் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதில் ஐ.எஸ் தீவிரவாத அமைப்பின் 30 முக்கிய தளபதிகளும், அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் பணியில் ஈடுபட்டிருந்த 300க்கும் மேற்பட்ட தீவிரவாதிகளும் கொல்லப்பட்டனர். இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற ஐ.எஸ் அமைப்பின் தலைவர் இப்ராஹிம் அபு பக்கர் அல் பாக்தாதியும் உயிரிழந்து விட்டார் என்று ரஷ்யாவும், அமெரிக்காவும் கூறின.

எனினும் பாக்தாதி இறந்ததற்கான எந்தவொரு உறுதியான தகவலும் இதுவரை கிடைக்காமல் இருந்தது. இந்த நிலையில் பாக்தாதிக்கு அந்தத் தாக்குதலில் வெறும் காயம் மட்டுமே ஏற்பட்டுள்ளதாக அமெரிக்கா தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அமெரிக்கா உளவுத் துறை அதிகாரிகள் தரப்பில், “சிரியாவின் ராக்கா நகரில் நடத்தப்பட்ட தாக்குதலில் பாக்தாதிக்கு காயமே ஏற்பட்டது. ஆயினும் அவர் தற்போது தனது வீரர்களுக்கு கட்டளைகள் வழங்க முடியாத நிலையில் செயலற்று இருக்கிறார். பாக்தாதிக்கு ஏற்பட்டுள்ள காயங்கள் அவரது உயிருக்கு அச்சுறுத்தல் தரும் நிலையில் இல்லை” என்று கூறியுள்ளனர். (அ)

# தேம்ஸில் வெடிகுண்டு விமானநிலையம் மூடல்

லண்டன், பெப்.14

லண்டனில், தேம்ஸ் நதிக்கு அருகில் 2ம் உலகப்போர் வெடிகுண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து லண்டன் நகர விமான நிலையம் மூடப்பட்டுள்ளது.

விமான நிலையம் மூடப்பட்டு, எல்லா விமானங்களும் ரத்து செய்யப்பட்டுள்ளதால், 16 ஆயிரம் பயணிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த வெடிகுண்டு ஞாயிற்றுக் கிழமை ஜார்ஜ் வி டோக்கில், கிழக்கு லண்டன் விமான நிலையத்தில் திட்டமிடப்பட்டிருந்த பணி நடைபெற்றபோது கண்டுபிடிக்கப்பட்டது. (அ)



# பணக்கார முதலமைச்சர்

ஹைதராபாத், பெப்.14

இந்தியாவில், ஆந்திர மாநில முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு அதிக சொத்துகள் கொண்ட முதலமைச்சர்கள் பட்டியலில் முதலிடத்தில் உள்ளார். அதேசமயம் சொத்துப் பட்டியலில் கடைசி இடத்தில் திரிபுரா முதலமைச்சர் மாணிக் சர்க்கார் இருக்கிறார்.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பின்னணி குறித்து ஆய்வு செய்து வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி வரும் ஏ.டி.ஆர் எனப்படும் ஜனநாயக சீர்திருத்தங்களுக்கான அமைப்பு, பல்வேறு மாநில முதலமைச்சர்களின் பின்னணி குறித்து ஆய்வு நடத்தியுள்ளது.

இதன்படி, இந்தியாவிலேயே அதிக சொத்து மதிப்புள்ள மாநில முதலமைச்சர்களின் பட்டியலில் ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு உள்ளார். அவரது சொத்து மதிப்பு 177 கோடி ரூபாவாகும். அதேசமயம் சொத்து மதிப்பு பட்டியலில் மிக குறைவாக உள்ள மாநில முதலமைச்சராக, திரிபுராவைச் சேர்ந்த மாணிக் சர்க்கார் இருக்கிறார். அவரது சொத்து மதிப்பு 26 லட்சம் ரூபாவாகும்.

அதிக சொத்து மதிப்பு கொண்ட முதலமைச்சர்களில் சந்திரபாபு நாயுடுவை தொடர்ந்து பா.ஜ.க.வைச் சேர்ந்த அருணாச்சல பிரதேச முதலமைச்சர் பெமா காண்டு 129 கோடி ரூபா சொத்து மதிப்புடன்இரண்டாவது இடத்திலும், பஞ்சாப்பை சேர்ந்த காங்கிரஸ் முதலமைச்சர் அம்ரீந்தர் சிங் 48 கோடி ரூபா சொத்துகளுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளனர். (அ)

# ‘காலா’ படத்தில் கசிந்த காட்சிகள்

சென்னை, பெப்.14


‘காலா’ மற்றும் ‘தளபதி 62’ படங்களின் படப்பிடிப்பு வீடியோக் காட்சிகள் கசிந்ததால், இரண்டு படக்குழுவினருமே கடும் அதிர்ச்சியில் இருக்கிறார்கள்.

ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் விஜய் நடித்துவரும் படத்தின் புகைப்படங்கள் மற்றும் வீடியோ காட்சிகள் இணையத்தில் கசிந்தன. இதனைத் தொடர்ந்து படக்குழுவினர் கடும் கட்டுப்பாடுகளோடு இரண்டாம் கட்டப் படப்பிடிப்பை கொல்கத்தாவில் நடத்தி வருகிறார்கள். இதன் படப்பிடிப்பு தளத்திலிருந்து 10 விநாடி காட்சி இணையத்தில் கசிந்துள்ளது. படப்பிடிப்பில் விஜய் நடித்த சண்டைக்காட்சியை மொட்டைமாடியிலிருந்து படமாக்கி இருக்கிறார்கள்.

மேலும், ரஜினி நடித்த ‘காலா’ திரைப்படம் ஏப்ரல் 27ஆம் திகதி வெளியீடு என்று அறிவித்தார் தயாரிப்பாளர் தனுஷ். அவர் அறிவித்த சில நாட்களிலேயே ‘காலா’ படப்பிடிப்பின் சண்டைக்காட்சிகள் இணையத்தில் கசிந்திருக்கின்றன.

இதில் தீப்பற்றி எரியும் அறைக்குள் ரஜினி ஒருவரை அடிப்பது போன்று காட்சி அமைந்திருக்கிறது. இவ்விரண்டு முக்கிய படங்களின் காட்சிகளின் கசிவால், தமிழ்த் திரையுலகம் கடும் அதிர்ச்சியில் இருக்கிறது.

எவ்வளவு கட்டுப்பாடுகள் விதித்து படப்பிடிப்பு நடத்தினாலும், படப்பிடிப்புத் தளத்தின் காட்சிகள் கசிவு என்பது பெரிய நடிகர்களின் படத்துக்குப் பெரும் பின்னடைவாகும். (அ)





# இங்கிலாந்தை சாய்த்தது நியூஸிலாந்து

வெலிங்டன், பெப்.14

அவுஸ்ரேலியா, நியூஸிலாந்து, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான முத்தரப்பு ரி-20 சர்வதேசப் போட்டித் தொடரில், வெலிங்டனில் நேற்று இடம்பெற்ற போட்டியில் இங்கிலாந்தை நியூஸிலாந்து வென்றது.

இந்தப்போட்டியில், முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து, 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 196 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், அணித்தலைவர் கேன் வில்லியம்சன் 72 , மார்டின் குப்தில் 65 , மார்க் சப்மன் 20 , டிம் செய்பேர்ட் 14 (ஆட்டமிழக்காமல் ) ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், அடில் ரஷீட் 2 விக்கெட்டுகளையும் கிறிஸ் ஜோர்டான் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு, 197 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து, 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 184 ஓட்டங்களைப் பெற்று 12 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில், டேவிட் மலன் 59 , அலெக்ஸ் ஹேல்ஸ் 47, டேவிட் வில்லி 21, சாம் பில்லிங்ஸ் 12 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், மிற்செல் சான்ட்னெர், ட்ரெண்ட் போல்ட், இஷ் சோதி ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் டிம் சௌதி ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக கேன் வில்லியம்சன் தெரிவானார். (அ)



# முன்னேறும் இலங்கை

கொழும்பு, பெப்.14

மிர்புரில் பங்களாதேஷுக்கு எதிரான போட்டியில் சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிக்காட்டி ஆட்ட நாயகன் மற்றும் தொடர் நாயகன் விருதுகளைவென்ற இலங்கை அணி வீரர் ரொஷேன் சில்வா ஐ.சி.சி.யின் சர்வதேச டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் 49 ஆம் ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

சில்வாவின் பொறுப்பான ஆட்டத்தால் குறித்த டெஸ்டில் இலங்கை அணி 215 ஓட்டங்களால் வென்று 1-0 என தொடரையும் கைப்பற்றியது. இந்த டெஸ்ட் போட்டியில் சில்வா முதல் இன்னிங்ஸில் 56 ஓட்டங்களைப் பெற்றதோடு இரண்டாவது இன்னிங்ஸில் ஆட்டமிழக்காது 70 ஓட்டங்களைக் குவித்தார். இந்த ஆட்டத்தின் மூலம் 29 வயதான ரொஷேன் சில்வா அதிரடியாக 29 இடங்கள் முன்னேறி முதல் 50 இடங்களுக்குள் வந்தார். அதாவது அவர் முதல் முறையாகத் தரவரிசையில் 49ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

அதேபோன்று குசல் மெண்டிஸ் இரண்டு இடங்கள் முன்னேறி 21ஆவது இடத்திலும் அஞ்சலோ மத்தியூஸ் 24ஆவது இடத்திலும், நான்கு இடங்கள் பின்தள்ளப்பட்ட திமுத் கருணாரத்ன 32ஆவது இடத்திலும் தனஞ்சய டி சில்வா 38ஆவது இடத்திலும் நிரோஷன் டிக்வெல்ல 4 இடங்கள் பின்தள்ளப்பட்டு 45ஆவது இடத்திலும் காணப்படுகின்றனர்.

மறுபுறம் மிர்பூர் டெஸ்டில் தனது கன்னி போட்டியிலேயே மொத்தமாக 8 விக்கெட்டுகளை வீழ்த்திய அகில தனஞ்சய டெஸ்ட் பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில் அதிரடியாக நுழைந்துள்ளார். அவர் 58ஆவது இடத்தில் இருந்து தனது தரவரிசை நிலையை ஆரம்பித்துள்ளார். இதில் முதல் இன்னிங்ஸில் 3 விக்கெட்டுகளை வீழ்த்திய வேகப்பந்து வீச்சாளர் சுரங்க லக்மால் மூன்று இடங்கள் முன்னேறி 30ஆவது இடத்தை பிடித்தார்.

அதிக டெஸ்ட் விக்கெட்டுகளை வீழ்த்திய இடதுகை பந்துவீச்சாளர் என்ற சாதனையை முறியடித்த அனுபவ சுழற்பந்து வீச்சாளர் ரங்கன ஹேரத் தொடர்ந்து இலங்கையின் உச்ச தரநிலையில் உள்ள பந்துவீச்சாளராக தம்மை தக்கவைத்துக் கொண்டுள்ளார். மிர்புர் டெஸ்டில் அவர் 4 விக்கெட்டுகளை வீழ்த்தியபோதும் அவர் ஒரு இடம் சரிந்து எட்டாவது இடத்தில் உள்ளார். (அ)

## ஆண்-பெண் பிரிவுகளில் சம்பியன்

# கரவெட்டிக் கபடியில் அல்வாய் மைக்கல்!





கரணாவாய் ,பெப் 14

கரவெட்டி பிரதேச செயலக ரீதியான கபடியில் ஆண் பெண் இரு பிரிவிலும் சம்பியனாகிச் சாதித்தது அல்வாய் மைக்கல் விளையாட்டுக்கழகம்.

கரவவெட்டி பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான கபடிப் போட்டியின் இறுதியாட்டங்கள் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று இடம்பெற்றன.

இதில் ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் அல்வாய் , மைக்கல் விளையாட்டுக்கழமும், அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகமும் மோதின. இதில் 78:14 என்ற புள்ளிகளைப் பெற்று சம்பியனாகியது மைக்கல் வி.க. ஆண்கள் அணி.

தொடர்ந்து இடம் பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் அண்ணாசிலையடி இளைஞர் விளையாட்டுக்கழகமும் ,அல்வாய் மைக்கல் விளையாட்டுக் கழகமும் மோதின. இதில் 62:27 என்ற புள்ளிகள் அடிப்படையில் மைக்கல் மகளிர் அணி சம்பியனாகியது. (அ-66)

# மண்டியிட்டது மன்செஸ்டர்



லண்டன்,பெப்.14

இங்கிலாந்து உதைபந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், நேற்று முன்தினம் நியூகாசில் யுனைட்டெட்டின் மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் நியூகாசில் யுனைட்டெட்டிடம் மன்செஸ்டர் யுனைட்டெட் தோல்வியடைந்ததுள்ளது.

இந்தப்போட்டியின் 65 ஆவது நிமிடத்தில் மற் றிச்சி பெற்ற கோலின் கார்ரணமாகவே 1-0 என்ற கோல் கணக்கில், தற்போது இங்கிலாந்து பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 13ஆம் இடத்துக்கு முன்னேறியுள்ள நியூகாசில் யுனைட்டெட், இரண்டாமிடத்திலுள்ள மன்செஸ்டர் யுனைட்டெட்டை வென்றது.

இந்தப்போட்டியில், மன்செஸ்டர் யுனைட்டெட்டின் ஜெஸி லிங்கார்ட், அன்டோனி மார்ஷியல், அஷ்லி யங், மைக்கல் கரிக் ஆகியோர் கோல் பெறும் 'வாய்ப்புகளை நியூகாசில் யுனைட்டெட்டின் கோல் காப்பாளர் மார்ட்டின் டுப்ரவகா அபாரமாகத் தடுத்திருந்தார்.

இதேவேளை, லிவர்பூல் 2-0 என்ற கோல் கணக்கில் சௌதாம்டனை வென்றது. லிவர்பூல் சார்பாக, றொபேர்ட்டோ பெர்மினோ, மொஹமட் சாலா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இந்தப்போட்டிகளின் முடிவில், இங்கிலாந்து பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில், 72 புள்ளிகளுடன் முதலிடத்தில் மன்செஸ்டர் சிற்றியும், 56 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் மன்செஸ்டர் யுனைட்டெட்டும், 54 புள்ளிகளுடன் லிவர்பூல் மூன்றாமிடத்திலும் உள்ளன. (அ)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 14.02.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.